கோயின்மாலை,

என்கின்ற

# திருவரங்கத்துமாலை.

மூலபாடம்.

---

அழகியமணவாளதாசர்

என்கின்ற

திவ்வியகவி-பிள்ளைப்பெருமாளையங்கார்

கலித்துறையினால் அருளிச்செய்தது.

இது

கையெழுத்துப் பிரதிகளில்-பாடந்தோறும் பிழைபடு
கின்றதை நோக்கி - அதை விலக்கும் பொருட்டு-
சென்னைமாநகரத்துப் பிரபுக்களிலும்-புலவர்களிலும்-
உபாத்தியாயர்களிலும்-பலரும் கேட்டுக்கொண்டதால்-

சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப்புலவர்

திரு-வேங்கடாசலமுதலியாராலே.

பலபிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து பிழைகளைத்
திருத்தி அச்சிலே பதிப்பிக்கப்பட்டது.

இது இவரது முக்கிய சிஷ்யர்

ஆயலூர்-பொன்னரங்கமுதலியாரால்

நிறைவேறினது.

---

சாலிவாகன சகாப்தம்-௲௭௱௨-விகிருதிவருஷம்.

ஹரி
ஸ்ரீ

நன்றாக.

# திருவரங்கத்துமாலை.

## தனியன்.

மறைப்பொருளோவச்சிரப்பொருளோமனுவேமுதலாம்
முறைப்பொருளோவிதிகாசபுராணமுதுப்பொரு - ளோ
இறைப்பொருளாநம்பெருமாளுடைத்திருவெட்டெழுத் துள்
ளுறைப்பொருளோமணவாளர்தம்மாலையினுட்பொருளே.

## காப்பு.

நாளும்பெரியபெருமாளரங்கர்நகைமுக - - - மும்
தோளுந்தொடர்ந்தென்னையாளும்விழியுந்துழாய்மணக்கும்
தாளுங்கரமுங்கரத்திற்சங்காழியுந்தண்டும்வில் - - லும்
வாளுந்துணைவருமேதமியேனைவளைந்துகொண் - டே.

## நூல்.

திருவாழிசங்குதிருவாழிவாழிசிறந்தகொண் - - - டல்
உருவாழியோகத்திருத்துயில்வாழியுலகளந் - - - - த
மருவார்மதுமலர்த்தாள்வாழிவாழிவணங்குமன் - - பர்
பெருவாழ்வனையபெருமாளரங்கப்பெருஞ்செல்வமே (௧)

படுப்பவனைப்பணிமெல்லணையாகப்பருவரை - - யால்
தடுப்பவனைப்பண்டுமண்டுகன்மாரிதரணியி - - - டந்
தெடுப்பவனைத்தம்மடியாரிடும்பச்சிலைக்குமுத் - - தி
கொடுப்பவனைச்செம்பொற்கோயிலுள்ளேகண்டுகொண்டனே
[னே (௨)

ஆளானவர்கண்களிகூரரங்கத்தரவணை - - - - - மேல்
காளாசலமெனக்கண்டுகொண்டேன்மறைகாணவொண் ணாத்
தாளாயிரஞ்செம்பொன்மாமுடியாயிரந்தாமநெ - - டுந்
தோளாயிரந்திருக்கண்ணாயிரங்கொண்டசோதியையே - (௩)

பூங்காவிரிப்புனற்கோயிலுள்ளேமிக்கபோகமெல் - லாம்
யாங்காணயோகத்துயில்கொண்டவாறெள்ளுமெண்ணெயும்போ
நீங்காதுலகத்துயிர்க்குயிராகிநியாமக - - - - - னாய்
ஓங்காரமாயதனுட்பொருளாய்நின்றவொண்சுடரோ - (௪)

ஈறங்காழிநாலெட்டிலக்கமியோசனைகட்செவி - - யின்
பிறங்காகமும்மையிலக்கமியோசனைபெருவ - - கில்
இறங்காழிமேகமென்னவேயரங்கத்திலெந்தைய - - தில்
உறங்காகநீளமைந்தைம்பதினாயிரமோசனையே - - (௫)

பாற்கடனாலெட்டிலக்கமியோசனைபாற்கட - - லுள்
மாற்கவிகோயிலகலமுமீரைந்துவானள - - - - வும்
தீற்கமொரேழுதிகழ்பணிமூன்றுசிறந்தக - - - - லம்
ஏற்கவினொன்றரையுத்தமர்நீளமிரண்டரையே - - - (௬)

அடித்தலமந்தவதலம்பொருதிரையாழிவை - - - யம்
கடித்தலநேமிக்கிரியுடையாடைகபாலிமுன் - - னாள்
மிடித்தலமந்தொழித்தானரங்கன்விழியிரு - - கோள்
முடித்தலமண்டமுகடினியாமென்மொழிவதுவே - - (௭)

திண்சுடராழியரங்கேசர்திக்குதிருச்செவி - - - யில்
மண்கழலிற்சத்தியலோகஞ்சிரத்தின்மருத்துயி - - ரில்
தண்கதிருள்ளத்தில்வானுந்தியிற்செந்தரணிகண் - - ணில்
ஒண்கனலிந்திரன்வாழ்முகப்போதிலுதித்தனரோ - - (௮)

புரமாயிரந்திருக்கண்மலராயிரம்புண்டரி - - - கக்
கரமாயிரங்கழற்கான்மலராயிரங்கண்ணிமு - - டிச்
சிரமாயிரந்திருநாமமுமாயிரஞ்செய்யகை - - - யில்
அரமாயிரங்கொண்டதிண்டிறலாழியரங்கருக்கே - (௯)

முன்னாள்விசும்பும்[illegible]வியுந்திசையுமுறைவகுத் - - த
அந்நான்முகன்றனதாவியெல்லாமலராசனை - - யாம்
மின்னார்மழைமுகினன்னாகமீதில்விழிதுயில் - - கூர்
என்னாதனுக்கொருமூச்சென்றுவேதமிசைக்கின்றதே - (௰)

எண்ணிற்றிகிரிப்பிறப்பிடமானதுமென்னும - - வரீ
நண்ணிச்சிறக்கிவிருப்பிடமானதுநாசமில் - - - லரு
விண்ணிற்பதிக்குக்கடைத்தலையானதும்விண்ணவர் - தங்
கண்ணிற்சிறந்ததுமாநீரரங்கர்தங்கண்ணிலொன்றே - (௰௧)

புறக்குன்றுபுல்லிதழ்முந்நீர்பிரசம்பொருவில்செம்பொன்
நிறக்குன்றுகன்னிகையெண்கிரிதாதுநிலமத - - னுள்
பிறக்குந்துகண்முதுமாசுணநாளம்பிரமன்வண் - - டு
சிறக்குந்திகிரியரங்கேசருந்திச்செழுமலர்க்கே - (௰௨)

இருகூலமும்பொருமாநீரரங்கத்திலெந்தையந் - தண்
முருகூர்கமலமுனியாய்வகுக்குமுறைமையி - - னல்
புருகூதனுக்குத்திருத்தம்பியாகிப்புரக்குமு - - மை
ஒருகூறுகொண்டவரனையழிக்குமுகாந்தத்திலே - (௰௩)

வாரித்தலமுங்குலபூதரங்களும்வானுமுள் - - - ளே
பாரித்துவைத்தவிவ்வண்டங்கள்யாவும்படைக்கமுன் - னுள்
வேரிப்பசுந்தண்டுழாயரங்கேசர்விபூதியி - - - லே
மூரிப்புனலிற்குமுழிகள்போலமுளைத்தனவே - (௰௪)

நெடுங்கடனிற்பதுநாயிறுகாய்வதுநிற்றலுங் - - கால்
ஒடுங்கிநடப்பதுந்தண்கார்பொழிவதுமூழித - - னில்
சுடுங்கனல்பற்றிச்சுடாதேயிருப்பதுந்தும்பைபு - னைந்
தடுங்கனலாழியரங்கேசர்தந்திருவாணையினே - (௰௫)

சீலப்புனற்பொன்னிநன்னீரரங்கருகந்திரி - - - யும்
காலத்தினிற்கொள்ளையண்டமெல்லாமுண்டுகாமர்ப - சுங்
கோலக்குழவியுருவாயகண்டமுங்கோத்தவெள் - - ளத்
தாலத்திலையின்புடைக்கேதுயில்வரகமகிழ்ந்தே - (௰௬)

தாற்றுக்கமுகவனஞ்சூழரங்கர்சயனமு - - - - கக்
காற்றுப்புலரும்படிமுதல்வீசுங்கலுறகளத் - - தன்
நீற்றுச்செவந்தெழுங்காராழித்தீச்சுடுநீள்கழ - - லின்
ஆற்றுப்பெரும்பெருக்கண்டமெல்லாங்கொள்ளுமந்தத்திலே
(௰௭)

சின்னூல்பலபல்வாயாலிழைத்துச்சிலம்பியின் - - னும்
அந்நூலருந்திவிடுவதுபோலவரங்கரண் - - - டம்
பன்னூறுகோடிபடைத்தவையாவும்பழம்படி - யே
மன்னூழிதன்னில்விழுங்குவர்போதமனமகிழ்ந்தே - (௰௮)

பந்திக்கமலத்தடஞ்சூழரங்கர்படைப்பழிப் - - பு
சிந்தித்திடுவதுமில்லைகண்டீரத்திசைமுக - - - னே
உந்திக்கமலம்விரிந்தால்விரியுமுகக்கடை - - - யில்
முந்திக்குவியிலுடனேகுவியுமிம்மூதண்டமே - (௰௯)

குடந்தைநடந்தைவனஞ்சூழரங்கத்தரவணை - மேல்
கிடந்தனர்துங்கக்கிரிமிசைநின்றனர்கேழலொன் - றாய்
இடந்தனர்மீளவிழுங்கினர்கான்றனரீரடி - - யால்
கடந்தனர்கைவழிமண்ணனைத்துந்தமன்காரணர்க்கே - (௨௰)

பின்வணக்கினியபெருமாளரங்கர்பெறுதுபெற் - - ற
முன்வனைப்பிரமனைவாழ்விக்கவேண்டிமுன்னாள்கவர்ந் - த
அன்னத்திருவுருவுள்ளேவளர்ந்ததற்கோரண்ட - - மாம்
என்னச்சிறந்ததுமூதண்டம்யாமெனியம்புவதே - (௨௧)

சூழிக்களிறுய்யுவெவ்வாய்முதலைதுணித்தவுக்கி - - ர
பாழித்திகிரிப்படையரங்கேசர்படைப்பவன் - - றன்
ஊழிப்பொழுதொருசேலாயொருசெலுவுட்கரந் - த
ஆழிப்பெரும்புனல்காணுதுதேடுவரவ்விடத்தே - (௨௨)

பாட்டுக்குமுத்தமிழ்வில்லிபுத்தூர்வரும்பாவைகு - ழற்
சூட்டுக்குநல்லவர்தென்னரங்கேசர்தொடுகடல் - வாய்
மோட்டுக்கமடத்திருவுருவாகிமுதுமுது - - - கில்
கோட்டுச்சயிலமுழுவதென்னுத்துயில்கொண்டனரோ- (௨௩)

திரிக்கின்றபொற்குன்றெழுந்தாமலாமைத்திருவுரு - வாய்ப்
பரிக்கின்றதிற்பெரும்பாரமுண்டேபுண்டுநான்மறைநூல்
விரிக்கின்றவுந்தியரங்கேசர்தந்திருமேனியின் - - மேல்
தரிக்கின்றதுமகரக்கடலாடைத்தராதலமே - - (௨௪)

ஓருருவெற்றையைத்தரித்ததுதானவரும்பருள் - - ளாய்
ஓருருநின்றுகடைந்ததுவேலையிதனிடை - - யோர்
பேருருவின்னமுதோடேபிறந்ததுபெண்மைகொண்டோர்
நாருருநின்றதரங்காவிதுவென்னநற்றவமே - - - (௨௫)

ஆருக்கிவளையளவிடலாந்தென்னரங்கரிந் - - - தப்
பாருக்கரந்தைதவிர்ப்பதற்காகப்பழிப்பில்பெ - ருஞ்
சீருற்றசெங்கட்கரும்பன்றியாகித்திருக்குளம் - - பில்
மேருக்கணகணமாத்தலைநாளில்விநோதிப்பரோ - (௨௬)

மருமலர்க்கோயின்மடமான்விரும்புமதிலரங் - - கர்
பெருமையைப்பேசுவதெப்படிநாம்பிறைவாளெயிற்றுக்
கருமுகிற்கோலப்பெரும்பன்றியாயகளேபரத் - - தின்
ஒருமயிர்க்காலடியூடேகடல்புக்கொளித்தனவே - (௨௭)

நிறக்குஞ்செழுஞ்சுடர்க்கோடுமிப்பாருநிசாமுகத் - துச்
சிறக்கும்பிறையுங்களங்கமும்போலுமெனிற்சிறு - கண்
மறக்குஞ்சரஞ்செற்றமாயோனரங்கன்வராகம - தாய்ப்
பிறக்கும்பிறப்பின்பெருமையெவ்வாறினிப்பேசுவதே(௨௮)

ஆடுமரவிற்றுயிலரங்கேசனருமகற் - - - - - கா
நீடுந்தறியிலுதித்திலனேனிகிலப்பொருள் - - - கள்
ஊடும்புறத்தினுமுண்மையெவ்வாறிவ்வுலகறி - - யும்
ஓடுமெடுப்புமில்லாவொருதெய்வமிவனெனவே - (௨௯)

மறந்தமறையுமழுங்கியமந்திரமும்மக - - - - மும்
இறந்ததெய்வங்களுமெல்லாமுனெங்குறைந்தெங்கியன் - ற
அறந்தருங்கோயிலரங்கனவ்வாளரிக்காளரி - - - யாய்ப்
பிறந்தபின்னன்றேபிறந்துபெருகிப்பிறங்கியதே - - (௩௰)

அடிகண்டிலரதலத்தவளாம்முக[illegible] - - - - ரர்
கடிகண்டிலர்முகிலுவானிவர்ந்தங்கமலத்தய - - - னார்
முடிகண்டிலரண்டமாமுகடேறியுமேதுணர்ந் - - தோர்
படிகண்டிலரரங்கேசர்கொள்சிங்கப்படிதனக்கே - (௩௧)

அறியினரங்கர்முன்னாளரியாகியவப்பொழு - - - து
கொறியினவுணர்தம்வெள்ளங்கள்கோடியுங்கொன்றதி - லோ
தறியின்வயிறிற்றகுவனெஞ்சுஞ்சரபத்துட - - லும்
நெறியின்வகிர்ந்தபினன்றேதணிந்ததுநீள்சினமே - (௩௨)

தாரேற்றவெண்குடைமாவலிவார்க்கவுந்தாமரை - மேல்
சீரேற்றதொன்னான்முகத்தோன்விளக்கவுஞ்செம்பொன்முடிக்
காரேற்றமேனியரங்கேசர்கையுங்கழலுமொக் - - க
நீரேற்றனவண்டிருக்குறளாகிநிமிர்ந்தவன்றே - (௩௩).

தேமிக்கபச்சைத்துழாயரங்கேசர்திருக்குற - ளாய்த்
தாமிப்புவனங்கடந்தவந்நாண்மணற்சாகரஞ் - - சூழ்
பூமிப்புடையளவிட்டபொற்றாமரைப்பூங்கழற் - - கு
நேமிச்சிலம்புதிருச்சிலம்பாகிநிலைபெற்றதே - (௩௪)

பூமருபொங்கர்புடைசூழரங்கர்பொலன்கழ - - லால்
பாமருமூவுலகுங்கொண்டபோதுபழிப்பில்பெ - ருங்
காமருமோலிச்சிகாமணியாகிக்கவுத்துவ - - மாய்த்
தேமருநாபியந்தாமரையானதுசெஞ்சுடரோ - - (௩௫)

ஓதப்புனற்பொன்னிநன்னீரரங்கருலகளந் - - - - த
பாதத்துநீர்விண்படியிலமூன்றிலும்பாய்புனை - வெண்
சீதத்தரங்கமந்தாகினியாகிச்செழுங்கங்கை - - யாய்
மேதக்கபோகவதியாகிநாளும்விழுகின்றதே - - (௩௬)

ஓலப்புனலரங்கேசர்பொற்றாள்பட்டுடைந்தவண் - ட
மேலக்கடாகத்தொளைவழியாகவிழும்புனல் - போய்க்
கோலத்திருவுருக்கொண்டவந்நாள்குரம்பட்டுடைந் - த
மூலக்கடாகத்தொளையால்விழுந்ததுமுற்புனற்கே - (௩௭)

மறிக்குங்கயற்கண்ணிடங்காளன்வாழ்வெள்ளிமால்வரையைப்
பறிக்குங்கபடன்பணைப்புயமோவவன்பைங்கட - கம்
செறிக்கும்புயஞ்செற்றவாயிரந்திண்புயமோவவற் - றைத்
தறிக்குந்திறமழுவோவரங்காசயத்தாருடைத்தே - (௩௮)

மாதண்டமேவுங்கரத்தாரரங்கர்வடமிதி - - - லிக்
கோதண்டவேகம்பிறப்பித்தபோதுகுவட்டுவெள் - ளி
வேதண்டமேயமழுவாளிநாணினன்வென்றிகண் - - டு
மூதண்டமஞ்சுமழுவாளிகோபமுதிர்ந்ததுவே - (௩௯)

மாகம்பிலத்திக்கிமையோருலகமழுவுடை - - யோன்
நாகதன்னுடலவாகப்பன்னகநடுங்கவம் - - - - பு
வேகங்கொடுதொடரப்பறந்தோடியுமீண்டுவந் - - தி
தாகஞ்சரணென்னநம்பெருமாளுயிர்காத்தனரோ - (௪௰)

மாதவரும்பர்பெருமாளரங்கர்வழியுண - - - - ரா
தாதவன்மைந்தனயிர்த்தவந்நாளிலக்காயநெ - - டும்
பாதவமேழுமுடனேநெடுங்கணைபட்டுரு - - - வப்
பூதலமேழுமெழுபாதலங்களும்புண்பட்டவே - - (௪௧)

ஒற்றைச்சிரஞ்சுட்டவுட்கடல்போற்புறத்தோலமி - ட
மற்றைக்கடல்வெந்தசெவ்வண்ணமோமதமாவழைக் - க
அற்றைக்குதவுமரங்கர்வெங்கோபத்தையஞ்சிய - ரன்
கற்றைச்சடையினிடையேவெதும்பினள்கங்கையுமே (௪௨)

கொங்குண்டுவண்டமர்தண்டாரரங்கர்வெங்கோபமுடன்
பொங்குஞ்சரஞ்செய்தமாயமென்றேதன்புகழடை - ய
மங்கும்படிக்குமறஞ்செயிராவணன்வாகினி - - கண்
டெங்குங்குரங்கெங்கும்ராமனென்றேங்கியிருந்திடவே (௪௩)

பேரொத்தவாயிரம்பேர்மடிந்தாற்பிறக்குங்கவந் - தம்
நேரொத்தவாடுமதாயிரமாடினெடுஞ்சிலை - - - யில்
ஏரொத்தகிண்கிணிசற்றேவிடுமதோர்யாமநின் - - று
காரொத்தமேனியரங்கர்தம்போரிற்கறங்கியதே - (௪௪)

சற்பத்துறங்குமரங்காவுன்பாதந்தனையடைத் - - த
நற்பத்தருக்கொருநாசமுண்டோநலமாமருத் - தின்
வெற்பைக்கொணர்ந்தவிறலனுமானுமவ்வீடண - னும்
கற்பத்தளவுமழியாதிருக்கவுங்கற்பித்தையே - - (௪௫)

ஆவும்பயமுமமுதமொப்பானவரங்கருக் - - - கு
மேவும்புகழின்னுமேவுங்கொலோவவர்மெய்யரு - ளால்
தாவுந்தரங்கத்தடஞ்சூழயோத்திச்சராசரங் - - - கள்
ஆவுங்கிளையுடன்வைகுந்தலோகத்திலார்ந்திடவே - (சசு)

ஒருதாயிருந்துவருந்தவைதேகியுடன்சுரத் - - - தில்
ஒருதாய்சொலச்சென்றதென்னரங்கனவையமுய்யும்வண் ணம்
ஒருதாயுதரத்திலோராறுதிங்களுறைந்தபின் - - - வினை
ஒருதாய்வயிற்றில்வந்துற்றதெம்மாயமுளைத்தருளே - (சஎ)

கதிபட்டபொன்னியரங்கேசராடுகருந்திரை - - நீர்
நதிபட்டபாடுநவின்றிடலாகுநலங்கெழு - - - கூடர்
நுதிபட்டநெட்டலத்தாலேயிழுத்திடநூற்றுவர் - தம்
பதிபட்டகண்கலக்கந்தெரியாதுபகருதற்கே - - (சஅ)

பண்டுவிழுங்கியபாருந்திசையும்பனிக்கட - - - லும்
சண்டநெடுங்கிரித்தானமெல்லாஞ்சண்பகாடவி - மேல்
மண்டுபெரும்புனல்சூழரங்கேசர்தம்வாய்மல - - ருள்
கண்டுமருவினள்சீர்நந்தகோபர்தங்காதலியே - (சகூ)

உன்னைக்களவிலுரலோடுகட்டிவைத்துன்னுடை - ய
அன்னைக்கொருத்தியறிவித்தபோதவ்வியாழிமங் - கை
தன்னைப்புணர்ந்தருடாரரங்காவவடன்மருங் - - கில்
பின்னைக்கொடுசென்றபிள்ளைமற்றொன்றுபேசுகவே (ருய)

கடிக்குங்கரளப்பிறைவாளெயிற்றுவெங்காளியன் - மேல்
நடிக்கும்பெரியபெருமாளரங்கர்நறைகமழ் - - பால்
குடிக்குங்களவுக்குமாறுகொண்டேயொருகோபியற் - றி
அடிக்கும்பொழுதிற்பதினாலுலகுமடிபட்டவே - (ருக)

ஆரந்தரும்பொன்னிசூ[illegible]ரங்காவுன்றனைச்சிவெ - - கு
தூரநெடுங்கயிறெல்லாமிசைசொத்துவைத்தும - வை
ஈரமருங்கிற்குறைந்திடக்கண்பிசைந்தேங்கும - - வள்
வேரம்புயமுகங்கண்டளவானவிநோதமென்னே ; (ருஉ)

சிந்திக்கநெஞ்சில்லைநாவில்லைநாமங்கள்செப்பநின் - வினை
வந்திக்கமெய்யில்லைவந்திருபோதுமொய்மாமலர்ப் - பூம்
பந்தித்தடம்புடைசூழரங்காதிபாண்டனுன் - - வினைச்
சந்தித்தநாண்முத்திபெற்றதென்னோதயிர்த்தாழியூமே (௫௩)

குன்றுவிளைவுடன்வண்மைபருவங்குணங்களி - - வை
பொன்றுதிருந்தகண்மாயமென்னோபொன்னிசூழரங் - கா
அன்றுயர்தங்குலமைந்தர்களாயுமலகிலி - - - - ளங்
கன்றுயுநாடொறுஞ்சென்றுவந்தாடியகாலத்திலே - (௫௪)

நெடுங்கானிலத்துடன்கோவலர்தாமிகநின்றுநெஞ் - சும்
நடுங்காதிமைத்திடுங்கண்களெல்லாமென்றுநண்ணலர்மேல்
விடுங்காலநேமியங்கையரங்காகண்விழிக்குமுன் - னே
சுடுங்கானநல்லனறுற்றவம்மாயமென்சொல்லுகவே (௫௫)

வானாடரிற்சிலர்சென்றுகண்டாரில்லைமற்றத - - - னில்
போனாரின்மீளப்புவியில்வந்தாரில்லைபூவின்மங் - - கை
ஆனாதசெல்வத்திருவரங்காகொச்சையாயபொல் - - லாம்
மேனாட்பரமபதத்தினிற்போயெங்ஙன்மீண்டதுவே - (௫௬)

கூனந்துலாவயற்கோயிலுள்ளேபள்ளிகொள்ளுமெங் - கள்
ஆனந்தவாரிதிருக்குழலூதவறத்தடிந் - - - - - - த
தானந்தழைத்தனகால்வளைநெக்கனகார்முகி - - றேய்
வானமயர்த்தனவையமெல்லாமெய்மறந்தனவே - (௫௭)

ஊருந்திரைப்பொன்னிநன்னீரரங்கவுருப்பல - - வாய்க்
காருந்தடித்துங்கலந்ததுபோலிடைக்கன்னியர் - - கள்
யாருங்களிக்கவிடையிடையேகலந்தின்பந - - - லம்
கூருந்திருநடமாடியமாயமென்கூறுகவே - - - (௫௮)

மின்போலிடையிடைமாதரொல்லார்[illegible]ன்மெய்தழு - வி
நன்போகசாகரத்துள்ளேமுழுகவுநாண்மல - - - ராள்
தன்போகமேமகிழ்தார்ரரங்காவுண்டர்தாமவ - - - னை
அன்போடணைத்துத்துயின்றதெம்மாயமறிந்திலமே - (௫௯)

நீரிற்புகுங்கண்டுதேரிவனைப்பார்க்குநிறுத்திய - பொற்
றேரிற்றெழும்பின்வனநீரினிற்காணுஞ்சிறந்தபச் - சைக்
காரிற்றிறமெய்யரங்கனுஞ்சேடனுங்கஞ்சவுஞ் - - சன்
ஊரிற்செலவுடன்போமக்குரூரன்றனுண்மகிழ்ந்தே - (௬௰)

நாமமிகும்புகழ்யாதவர்வாழுநகரிலும் - - - - - பார்
தாமருவுஞ்சவைதத்தமவாயதவிசயவி - - - - ழும்
தேமருபொங்கரரங்கேசருக்கிரசேனனுக் - - - - கு
மாமுடிவைக்கும்படிபடிமேற்கொடுவாவெனவே - (௬௧)

முறியாவெழுந்திரைமாநீர்மதுரையின்மன்னவ - - னைக்
குறியாதவன்படைவந்தவந்நாள்செழுங்கோகன - கப்
பொறியாடரவணைத்தென்னரங்காவொருபூதரு - - மங்
கறியாவகைத்துவராபதிக்கேயெங்ஙனுக்கிவனையே - (௬௨)

நிறைத்துளவம்புனைநம்பெருமாள்விறலுஞ்சொல்வதோ
மறைப்பரிபூட்டியமாநிலத்தேரில்லைவாளெயிற் - றின்
கறைப்பணிநாணுடைமேருவில்லில்லைகடும்பவ - - னச்
சிறைத்தழலம்பில்லையொன்னாரூருபுரஞ்செற்றதற்கே (௬௩)

அருட்கொண்டவன்னவரங்கர்சங்கோசையிலண்டமெல்லாம்
வெருட்கொண்டிடர்படமோகித்துவீழ்ந்தனர்வேகமுடன்
தருக்கொண்டுபோகப்பொருதேதொடருஞ்சதுமுகனும்
செருக்கொண்டமுப்பத்துமுக்கோடிதேவருஞ்சேவையுமே (௬௪

நிணக்கோலநேமித்திருவரங்கேசநினக்கினி - - - - ய
குணக்கோகனகையுங்கண்டனளோமணிக்குன்றில்லை - கும்
தணக்கோதையர்பதினாறுயிரவனாக்கைப்பிடிக் - - - க
மணக்கோலமும்பதினாறுயிரங்கொண்டுவாழ்ந்தவன்றே (௬௫)

விடந்தோயரவிற்றுயி[illegible]ங்கேசவிசும்புமுட் - - - ட
நடந்தோகைதன்னுடனூரதன்காணநகைக்குமுத் - - து
வடந்தோய்வனமுலையெண்ணிரண்டாயிரமாதர்தங் - கள்
இடந்தோறுநின்றெழில்வேறுயிருந்ததங்கெவ்வண்ணமே (௬௬

பாவிக்கொணாதபெருமாள்விநோதம்பகரும - - தோ
வாவிக்குணாரதணாரதியாயொருமன்னவன் - - - - றன்
ஆவிக்குலக்கொடியாய்நெடுங்காலத்தழிவிலின் - - டம்
மேவிக்குடும்பத்திடும்பையெல்லாமெய்திவிட்டனனே (௬௭)

தண்டுளவம்புனைதாரரங்கர்ஐவர்தையலுக் - - - கு
வண்டுகிலொன்றவைக்கண்ணுற்றபோதுதன்மன்னர்முன்னே
கண்டுளிசோரத்தொழுதுநின்பேர்கட்டுரைத்தபின் - வனி
ஒண்டுகில்கோடிகுவித்ததெம்மாயமுரிந்துரிந்தே - (௬௮)

இசையளவிட்டவரங்கேசனைவர்தம்மேவலிற் - போய்
வசையளவிட்டமகிபன்முன்னேவளருந்திர - - டோள்
திசையளவிட்டனபாரளவிட்டனசேவடி - - - வான்
மிசையளவிட்டனபொன்முடிமேலென்விளம்புவதே - (௬௯)

மாயிருஞாயிறுபாரதப்போரின்மறையவங் - - - கன்
பாயிருணீத்ததென்னகண்மாயம்பவளநெற் - - றிச்
சேயுயர்மாமதில்சூழரங்கேசதிரண்டுதித் - - - - - த
ஆயிரங்கோடிதிவாகரன்போலொளிராழிகொண்டே - (௭௰)

நெட்டரவின்பெருமூச்செழவீசுநெருப்பில்வெந் - து
பட்டகடம்புத்தழைத்ததுமீளப்பசுந்துள - - - வின்
மட்டவிழ்தொங்கலரங்கர்பொற்றுள்படவாளிவெந் - தீ
சுட்டகருங்கட்டையும்பெற்றதாருயிர்சொல்வதென்னே (௭௧)

தாளாற்சகங்கொண்டதாரரங்காபண்டுசாந்திபன் - சொல்
கேளாக்கடல்புக்கசேயினைமீட்டதுங்கேதமு - - டன்
மாளாப்பதம்புக்கமைந்தனைமீட்டதுமாறல - - வே
மீளாப்பதம்புக்கபாலனைநீயன்றுமீட்டதற்கே - (௭௨)

பொருங்கேதனப்படைமன்னனை[illegible]யத்தப்புவிமடத் தை
பெருங்கேதநீக்கிநடந்ததுமீளப்பிறங்குபுள் - - ளின்
வருங்கேசவன்சக்கிரமாயேனரங்கன்வரவிடுத் - - - த
கருங்கேசமொன்றுதன்னிச்சையிலேசெய்தகாரியமே (௭௩)

அராவணையிற்றுயிறென்னரங்காமறையாயும்வண் - ணம்
பராசரன்மாமகனாகியநீபண்டுபாரதப் - - - போர்
பொராவிழுநூற்றுவர்சேனையெல்லாம்புனற்கங்கைவெள்ளத்
தராதலமேல்வரக்காட்டியவாதந்தைசஞ்சிக்கவே - (௭௪)

தருமந்தவிர்த்துபொறைகெட்டுச்சத்தியஞ்சாய்ந்துத - யை
தெருமந்துதன்பூசனைமுழுதுஞ்சிதையக்கலி - - - யே
பொருமந்தகாலக்கடையினிலெம்பொன்னரங்கனல் - லால்
அருமந்தகற்கியென்றுரோயவைநிலையாக்குவனோ - (௭௫)

தெள்ளும்புனற்பொன்னிநன்னீரரங்கர்சிலாகிக்கு - மா
றெள்ளுங்கரந்துறையெண்ணெயும்போலெண்ணில்கோடியண்ட
துள்ளும்புறம்புமொழியாதுநின்றுமுகங்கடொ - றும்
தொள்ளுந்திருவுருவெல்லாமவரதிகோலங்களே - (௭௬)

உம்பர்க்கரியபெருமாளரங்கர்தம்முன்மையெல் - லாம்
இம்பர்க்குவகில்வெளியிட்டவேசரணில்லையென் - றோர்
கும்பக்கடகயங்கூப்பிடச்சென்றதுங்கோளரி - யாய்த்
தம்பத்துதித்ததுந்தாழிக்குவீட்டினைத்தந்ததுமே - (௭௭)

பொங்கரவென்பதுமெல்லணையூர்திவெம்புள்ளர - சு
பங்கயமின்றொண்டுபார்மகடேவிபடைப்பவன் - - சேய்
கிங்கரர்விண்ணவர்சாதகனுடிறைகேழலொன் - - றாய்
அங்கணெடும்புவியெல்லாமிடந்தவரங்கருக்கே - (௭௮)

சிங்காதனம்பொற்கிரிதிருமஞ்சனந்தெய்வவிண் - ணீர்
கொங்கார்தொடையுடுத்தாமஞ்சுடருடைக்கோள்விளக்கம்
பொங்காழிமண்டிருப்போனகமாக்கினர்புண்டரி - கை
தங்காதலர்தம்பெருமாளரங்கர்தமக்குமுன்னே - (௭௯)

தேமாமலர்க்கயஞ்சூழுங்காயின்மேவுதிருவரங் - - கர்
தாமாதரித்ததிருத்தேவிமாரிற்றரங்கவு - - - - டைப்
பூமாதுநல்லும்புரத்தேசுமந்துபுரக்கும - - - - லர்
மாமாதுசெல்வங்கொடுத்தேயுயிர்களைவாழ்விக்குமே (௮௰)

நம்பெருமாளெழுத்தெட்டின்பெருமைநவிலும் - தேச
சம்பரன்மாயப்புரோகிதர்சூழ்வினைதாரணி - - -வாள்
வெம்படைமாசுணமாமதவேழம்விடந்தழல் - - -கால்
அம்பரமேமுதலானவைபாலனுக்கஞ்சினவே - - (௮௧)

அத்தாவரங்கத்தமர்ந்தவனேயெழுத்தாறிரண் - - டின்
வித்தாயநின்னருள்கொண்டல்லவோவினையொன்றறி - யா
உத்தானபாதன்மகன்சலியாதுலகுள்ளள - - - - வும்
எத்தாரகைக்குமுனிவர்க்குமேற்சென்றிருக்கின்றதே(௮௨)

புடைக்குங்குடமுலைப்பூமகளார்தம்பொருட்டுமுந் - நீர்
அடைக்கும்பெரியபெருமாளரங்கரவர்கரத் - - துப்
படைக்குங்கமலமளிக்குமின்றுழிப்படைபடைக் - கும்
துடைக்குங்கதைமுத்திமாற்றுதநல்குஞ்சுரிசங்கமே(௮௩)

ஞாலத்திகிரிமுதுநீர்த்திகிரிநடாத்துமிந் - - - - தக்
காலத்திகிரிமுதலானயாவுங்கடல்கடைந் - - - - த
நீலத்திகிரியனையாரரங்கர்நிறைந்தசெங் - - - கைக்
கோலத்திகிரிதலைநாளினிற்கொண்டகோலங்களே - (௮௪)

மோதித்திரைதவழ்நன்னீரரங்கர்முடிமுத - - - லாம்
சாதிக்கதிர்மணிப்பேரணியாகத்தனஞ்சயன் . - - போர்
பேதித்திரவுபகலாகவிண்ணிற்பிறழ்ந்துசெங் - - கேழ்
சோதித்திகிரித்திருமேனியெங்குஞ்சுடர்விடுமே - (௮௫)

ஓவாழிசூழ்புவியுச்சியிலேந்துமுகக்கடை - - - - யில்
காலானநற்குணமூர்த்தியைக்காலுமக்காலமெல் - லாம்
மேலாவிளங்கும்புவிமீதிலென்றன்விழுத்துணை - யாம்
மாலாமரங்கமணவாளர்கண்டுயின்மாசுணமே - - (௮௬)

சென்றாற்குடையாங்கடற்புணையாந்திருத்தீவிகை - யாம்
நின்றாலிருதிருப்பாதுகையாதித்திணைக்கணை - - யாம்
குன்றுமணியொளியாசனமாம்புணைகோசிகை - - யாம்
அன்றாலிலையிற்றுயிலரங்கேசர்க்கரவரசே - - - (௮௭)

சிரஞ்சேதனன்விழிதேகஞ்சிறைபின்சிலைபதங் - - கந்
தரந்தோள்களுருவடிவம்பெயரொசுர்சாமமு - - மாம்
பர்ந்தேதமதடியார்க்குள்ளபாவங்கள்பாற்றிய - - ருள்
சுரந்தேயளிக்குமரங்கர்தம்மூர்த்திச்சுவணனுக்கே - (௮௮)

ஆளிலமரர்ரரங்கேசர்சேவைக்கணுகுந்தொ - - றும்
கோளில்திரவிளாவிலக்கும்பிரம்பின்குவினபட - - லால்
தோளிலடித்தழும்புண்டச்சுரர்க்கச்சுரர்தொழ - - லால்
தாளின்முடித்தழும்புண்டுநஞ்சேவினைத்தலைவருக்கே (௮௯)

ஆதித்திருவெழுத்தைந்துடைத்தாயுமராவணிந் - - தும்
சோதித்திருக்கண்கண்மூன்றுடன்றேன்றுஞ்சுருதிசொன்ன
நீதிக்கிசையநடவாமனிதனைநேமிகொண் - - - - டு
வாதித்தருளும்பெருமாளரங்கர்தம்வாகனமே - - (௯௰)

வல்லாமுலைத்திருவின்பெருமான்விட்டவாகனம் - போய்த்
தொல்லாழிநீரைக்கடந்ததுதாளின்சுடரிரண் - - - டும்
செல்லாதலூரைத்திரிபுரங்கண்டதுசேவினைவெள் - ளம்
எல்லாமுயக்கொண்டதுமருந்தார்கிரியேந்திவந்தே - (௯௧)

தொல்லைக்கமடத்தலநவகண்டந்தொடுகட - - - னீர்
எல்லைக்கிரிதனக்கிப்புறத்தெண்கிரியப்புறத் - - - தில்
மல்லைப்பரிதியின்மண்டலநாகமவ்வான்முகட் - - - டூர்
அல்லப்புறத்துவைகுந்தம்பொற்கோயிலரிக்கிடமே -(௯௨)

எந்தவுலகத்துமேலதுநித்தியவின்பத்த - - - - - து
பந்தநசிப்பதுநித்தருமுத்தரும்பாரிப்ப - - - - து
முந்தமறையினின்றல்லாதெத்தேவர்க்குமுன்னவ - - ரி
தந்தமிலதரங்கன்மேவும்வைகுந்தமானதுவெ - - (௯௩)

காவுஞ்சுரபியுஞ்சிந்தாமணியுங்கடிகம - - - - - ழ்ப்
பூவும்பணிலமும்பொங்கிளமாவும்புகர்தடக் - - - கை
மாவும்பிறையுமமுதமுமெங்கண்மதிலரங் - - - - கர்
மேவுந்தரங்கக்கடலில்லையாகிலிவ்விண்ணவர்க்கே - (௯௪)

அருமறையோதியவோரெட்டெழுத்துமயன்படைத் - த
இருநிலமீதினில்யாவருங்காணவிலங்குதுத் - - - திக்
குருமணிநாகத்திலெங்கோன்விழிதுயில்கொண்டரு - ளத்
திருமுடியிலேழும்விமானமுமாகிச்சிறக்கின்றவே - - (௬௫)

தாழாதிபஞ்சொல்லவந்தாரரங்கர்தயங்குசெம் - பொற்
கேழாவிமானங்கிளர்செம்பொன்மேருகிரிநிகர்த் - - த
ஏழாவரணத்திடையிடைத்தீவுகளிவ்வவண்ணத் - - - தும்
சூழாறுமாகடலெவ்வாறுநாமினிச்சொல்லுவதே - (௬௬)

ஞாலத்திகிரிபகலிரவாகநடத்துமித் - - - - - - த்
காலத்திகிரிநடக்கவற்றேவெங்கனலுமிழ் - - - வாய்
ஆலப்பணியவணமீதேயரங்கத்தமர்ந்துறை - - - யும்
நீலக்கடல்கண்விழித்துறங்காவிடினிச்சமுமே - - (௬௭)

தாமக்கடையுகத்துள்ளேவிழுங்கித்தரித்தப - - - ழஞ்
சேமப்புவனஞ்செரிக்குமென்றேசிவன்மாமுடிக் - கு
நாமப்புனறந்தபொற்றாளரங்கர்நலஞ்சிறந் - - - த
வாமத்திருக்கரமேலாகவேகண்வளர்வதுவே - - (௬௮)

கதிராருநீண்முடிசேர்ந்தகைப்போதெக்கடவுளர்க் - கும்
அதிராசனானமைகாண்மினென்றேசொல்லுமாயபொன்மா
மதிலாரரங்கர்பொற்றாளார்திருக்கரமற்றிது - - - வே
சதுரானனன்முதலெல்லாவுயிர்க்குஞ்சரணென்னுமே (௬௯)

மோகத்துயில்புரிமெய்போலக்கண்டமுறையினுக் - கிங்
கேகத்திருவுருவென்றறிந்தேனிந்திரையையன் - போ
டாகத்துவைத்தருடென்னரங்காவங்குமிங்குமொக் - கப்
போகத்துக்கொண்டபணநாகமொன்றுபொறுத்தபின்னே - (௭௰)

சோதித்திருவுருவாகாயமாகச்சுருதிநன் - - - - னூல்
சாதித்துநின்றுதெளிந்துவிட்டேன்மிக்கதானவ - னைச்
சேதித்தநேமித்திருவரங்காசங்கைதீரவுன் - - - றன்
ஆதித்திருவுருவின்பேரணிநிறமானபின்னே - (௭௧)

ஓங்காரவட்டத்துமாசுணப்பாயிலுலோகமுண் - - - ட
பூங்கார்விழிக்குப்புலப்பட்டதாலெப்பொழுதுமென் வினை
நீங்காதிடர்செய்யுந்தீவினைகாளினிநின்றுநின் - - று
தேங்காதுநீருமக்கானிடத்தேசென்றுசேர்மின்களே -(௭௨)

விண்ணிட்டசோலையரங்கத்துமேவியமெய்ப்பொரு - ளைக்
கண்ணிட்டபார்வையிற்கட்டியென்கண்வரக்கண்டுட - லாம்
புண்ணிட்டவண்ணக்கிழியுட்பொதிந்துபுறத்துவெள் - ளை
மண்ணிட்டிலச்சினையிட்டுவிள்ளாதுள்ளம்வைத்தனனே(௭௩

கைத்துப்பழவினைதித்திக்கவென்றன்கருத்தினுள் - ளே
வைத்துத்திமெத்தையின்மீதேதுயிலும்பைங்கேழதித்து
மைத்துக்குளிர்ந்துமதுரித்துமெத்தென்றுமாமணத் - து
நெய்த்துப்புகர்த்துநிகர்க்கும்பொன்மேனிநெடுங்கடலே(௭௪)

தெள்ளாவரும்பொன்னிசூழரங்காவொருதேவனை - யும்
உள்ளாதெனதுள்ளம்யானென்செய்வேன்விண்ணிலொருவனைப்
புள்ளாகிவேதப்பொருளாகியுன்னைத்தன்பொற்கழுத் - தில்
கொள்ளாவருகின்றகோலமுள்ளேகண்டுகொண்டபின்னே(௭௫)

முன்பாலிலைமகவாகியபோதித்தலமூதண்டங் - - - கள்
உன்பரவொடுங்கியிருந்ததுபோலுமுததிமங் - - கைக்
கன்பாவரங்கத்தென்னாரமுதேயனுவாயிருந் - - தும்
என்பாலகண்டமுமாகியநீவந்திருக்கின்றதே - - (௭௬)

வலைப்பால்விடம்பிணைக்கண்ணியர்போகத்தின்மாலுறுமென்
தலைப்பாற்கழலருடாரரங்காபலதாயர்தந் - - - - த
முலைப்பாற்கடலுன்றிருக்கழலாணிவெண்முத்தெறி - யும்
அலைப்பாற்கடலினளவாமெனின்மற்றதுவுமன்றே - (௭௭)

தொடைமாறனுந்தமிழ்[…]ன்மாறனுந்தொழத்துத்திவெள்ளைக்
குடைமாசுணத்திற்றுயிலரங்கேசகுலவுவை - - வேற்
படைமா[…]கொண்டமைக்கண்ணியர்பால்வைத்தபாசநெஞ்சை
மடைமாறியுன்றன்றிருவடிக்கேவரவைத்தருளே -(௭௮)

கரணந்தவிர்ந்துவிழிபோய்ச்சுழன்றுகலங்குமென் - றன்
மரணந்தனில்வந்துதவுகண்டாய்கொற்றவாளியொன் - றால்
அரணங்கடந்தவன்காணாவரங்கவென்னாருயிர்க் - - குன்
சரணஞ்சரணமொழிந்தில்லைவேறித்தராதலத்தே - (௱௯)

நீடுந்திகிரிப்படையாயுவணக்கற்றுநின்வணையென் - றும்
பாடும்படித்தமிழ்ப்பாடறந்தாய்பழநான்மறை - நூல்
தேடுந்திருவரங்காவடியேனுயிர்செல்லுமந் - - நாள்
வீடுந்தரவிருந்தாயெனக்கியாதினிவேண்டுவதே - (௱௰)

ஆவைக்கல்லாவையெதிரொன்றுசொல்லியழுக்கடைந் - த
நாவைப்பரிசுத்தம்பண்ணியவேகஞ்சரஞ்சன்விட் - - ட
கோவைச்சகட்டைப்பகட்டைப்பொருதியகோயிலில்வாழ்
தேவைப்பகர்ந்தசெஞ்சொற்றிருநாமங்கள்சிற்சிலவே (௱௰௧)

---

மணிதக்கவிமொழியாமங்கைவாழ்மணவாளவள் - - ளல்
புனிதக்கவிகொண்டுமாலைசெய்தான்புயல்போன்முழங்கும்
தொனிதக்கசங்கந்திருச்சக்கரஞ்சுடர்வாண்முச - - லம்
குனிதக்கசார்ங்கந்தரித்தாரரங்கர்பொற்கோயிலுக் - கே

❁ முற்றும். ❁

☞ அழகியமணவாளதாசர்திருவடிகளேசரணம்.

ஐயங்கார்பிரபந்தங்கள் பதித்து ஆனதுகள்.

திருவேங்கடமாலை. திருவேங்கடத்தந்தாதி. நூற்றெட்டுத்
அழகரந்தாதி. திருவரங்கக்கலம்பகம். திருப்பதியந்தாதி
திருவரங்கத்தூசல். திருவரங்கத்துமாலை. திருவரங்கத்தந்தாதி.

இதின் பேரோட்டில் குறித்த பிரபுக்கள் முதலானோர்க்கு - முதலில் நான் வாக்குக் கொடுத்தபடி இவ்வெட்டும் திருத்திப்பதிப்பித்து நிறைவேற்றினேன். மேலும் அவர்களே கேட்டுக்கொள்ளையால் - திருத்திப் பதிப்பிக்கப்படும் வடவேங்கடநாராயணசதகத்தில் அதற்கு இனமாகத் தொடரும் பிரபந்தங்களின் பெயர்கள் அறிவிக்கப்படும். திரு - வேங்கடாசலமுதலி.